சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
சித்திரை 13
ஜமா. அவ். 16
புதன் (26-4-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 92
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35

# செல்வாவின் பார்வை நம்மீது!



அன்பு நண்பா,

ஈழத் தமிழினத்தின் இதயதாரகையாக, ஆத்மீக ஒளியாக ,ஆதர்ஸத் தலைவராக, திசையறிகருவியாக, வழிகாட்டும் ஒளிவிளக்காக, வாஞ்சைமிகு தந்தையாக, விளங்கிவந்த மூதறிஞர் செல்வா அவர்களின் புனிதத் திருமேனி அக்கினியுடன் சங்கமமாகி ஓராண்டு ஓடி மறைந்து விட்டது! பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் சத்தமிட்டுக்கதறியழுதிட, அன்னையர் குலம் கண்ணீர் சிந்திட, தலைவர்கள் தேம்பியழுதிட, யாழகத்தில் மூதறிஞரின் பொன்னுடல் தீயின் கோரநாக்குகளுக்கு விருந்தாகிய அந்த வேதனை நிறைந்த காட்சி இன்னும் நம் கண்களை விட்டு அகலவில்லை; அதற்குள் காலம் எனற புத்தகத்திலிருந்து 365 பக்கங்கள் கிழிக்கப்பட்டுவிட்டன!

முப்பதாண்டுகளாக தமிழ் சமுதாயத்தை வழிநடத்தி வந்த செலவா அவர்கள், தன்னுடைய உணர்வுகளையெல்லாம் தமிழனுடைய உணர்வுகளுடன் இணைத்துவிட்டு அமரராகிவிட்டார்கள்! அமரர்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்கு ஒருபோதும் மரணமேயில்லையென்று கூறுவார்கள், அதனால்தான் மறைந்தும் மறையாத ஜீவ ஒளியாக தமிழர் நெஞ்சங்களில் எந்நாளும் சுடர்விட்டு ஒளிவீசிக்கொண்டிருக்கும் தந்தை செல்வாவை 'அமரர்' என்று அழைக்கிறோம்!

தமிழினமே தாமாக, தாமே தமிழினமாக நின்று— தமிழ் குலத்தை நெறிதவறாத பாதையில்— விடுதலை இலட்சியத்தை நோக்கி— சிந்தாமல் சிதறாமல் அழைத்துவந்தவர் அமரர் செல்வா! அன்றும் இன்றும் என்றும் செல்வா எனும் அந்தப் பேரொளியே நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கப்போகிறது!

செல்வா என்றால் உறுதி!
செல்வா என்றால் துணிவு!
செல்வா என்றால் வீரம்!
செல்வா என்றால் நேர்மை!
செல்வா என்றால் அடக்கம்!
செல்வா என்றால் அமைதி!
செல்வா என்றால் வாய்மை!
செல்வா என்றால் ஒழுக்கம்!

இத்தகைய பெரும் பண்புகளின் கூட்டுமொத்த வடிவம்தான் தந்தை செல்வா! இந்தப் பண்புகளின் உறைவிடமாகத்தான் தமிழர் விடுதலை இயக்கமும், அதை வழிநடத்திச் செல்வோரும் எதிர்காலத்தில் விளங்கவேண்டுமென்று கருதிய தந்தை செல்வா அவர்கள், தாமே உதாரண புருஷராக வாழ்ந்து காட்டினார்!

தந்தை செல்வாவின் அரசியல் வாழ்வில் எரிமலை குமுறியதுண்டு; பெரும்புயல் வீசியதுண்டு; காட்டாறு குறுக்கிட்டதுண்டு; கடும் பாறை எதிர்ப்பட்டதுண்டு; ஆனால் அவற்றையெல்லாம் கண்டு அவர் கதிகலங்கினாரில்லை! எரிமலையை குளிர்நிலவாக்கினார்; புயலைத் தென்றலாக்கினார்; காட்டாற்றை அமைதியான நீரோடையாக்கினார்; கடும் பாறையை படிக்கற்கள் ஆக்கிப் பயணத்தைத் தொடர்ந்தார்!

ஆம், இதுதான் தந்தை செல்வாவின் பேராற்றல்! இந்தப் பேராற்றலையே நாம் செல்வாவிடமிருந்து பெற்றாகவேண்டும்! செல்வா எனும் இந்தப் பேராற்றல்தான் தமிழ் சமுதாயத்தை ஒரு தேசிய இனமாக்கி உதவியது; இந்தப் பேராற்றல்தான் தமிழர் விடுதலைக்கூட்டணியெனும் விரிநத தமிழர் இயக்கமொன்றுக்கு வித்திட்டது! தமிழ் சமுதாயத்தை ஒருகுடைக்கீழ் கொண்டுவந்தது!

அரசியலில், குறுக்குவழியிற் சென்று வெற்றியீட்டும் முறையை அறவே ஏற்றுக்கொள்ளாதவர் செல்வா; அதை ஒரு 'இராசதந்திரம்' என்று அளவில்கூட ஒப்புக்கொள்ளாதவர் செல்வா; அரசியலில் அவர் பின்பற்றிய ஒரேயொரு 'இராசதந்திரம்,' நேர்மையும், சத்தியமும், ஒழுக்கமும்தான்! வெள்ளை உள்ளத்துடன் எதையும் நேரடியாகப் பேசுவது செல்வாவின் சிறந்த பண்பாகும்; பிறருக்கு கசப்பாக இருக்கும் என்பதற்காக சொல்ல வேண்டியவற்றை சொல்லாமல் மறைக்கும் பண்பு செல்வாவிடம் இருந்ததில்லை! இதனால்தான் தந்தை செல்வாவின் அரசியல் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாதவர்களும் கூட, அவருக்கு தலைவணங்கிவந்ததை நாம் கண்டோம்!

நோய்நொடியால் நொந்து போனகுச்சி உடம்புடன் — தமிழ்

## அரசியல் மேடை

பேசும் மக்கள் வாழுகின்ற இடமெல்லாம் சென்று தமிழ் சமுதாயத்தின் சிந்தனையைத் தட்டிவிட்டு, தமிழ் மண்ணின் விடுதலைக்காக போராட வேண்டுமென்ற ஆர்வத் தீயை மூட்டி—தனக்குப்பின்னும் வழிதவறாது இலட்சியப் பாதையில் முன்னேறுவதற்கு, தகுந்ததோர் அமைப்பை ஆக்கித்தந்து—அஞ்சாநெஞ்சம் கொண்ட வீரத் தமிழ் இளைஞர்களையும் உருவாக்கித்தந்து விட்டு—தமிழர் விடுதலைப்போர் இனி தங்கு தடையின்றி நடைபெறும் என்கிற மனநிம்மதியுடன் நம் ஒவ்வொருவருடைய செயலையும் ஆத்மீக பேரொளியாக நின்று உற்றுப்பார்த்துக் கொண்டு நிற்கிறார் தந்தை செல்வா!

தந்தை செல்வா நம்மோடுதான் இருக்கிறார்—நம் செயல்களை யெல்லாம் கண்காணித்துக் கொண்டு தான் இருக்கிறார் என்கிற உணர்வு நம்மிடமிருக்குமட்டும்—நாம் எந்தப் பலவீனங்களுக்கும், சபலங்களுக்கும் ஆட்பட மாட்டோம்! செல்வா எனும் மந்திரசக்தியே நம் அயர்வைத் தீர்க்கும் அருமருந்தாகும்!

தமிழ் எங்கள் அயர்வுக்கு.
சுடர் தந்த தேன்

என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்—'தமிழ்மட்டும் அல்ல— செல்வா எனும் நாமமும் நமது அயர்வு போக்கும் அற்புதத் தேன்! அந்தத் தேனுக்குள் மூழ்கி நின்று தீந்தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக போராடிட ஏப்ரல் 26—செல்வா நினைவு நாளில் உறுதியேற்போம்!

—உன் அன்புத் தோழன்

கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணிலிருந்து மண்ணுக்கு விடுதலைப்படை புறப்படுகிறது

பஞ்சுப்பொதிகள் போல் ஆங்காங்கே முகிற் கூட்டங்கள் சிதறிக்கிடந்தன. இளம் தென்றற்காற்று புதுக்கன்னி போல் நடை போட்டுக் கொண்டிருந்தது. புத்துணர்ச்சியில் உள்ளத்தைச் சிலிர்க்கவைக்கும் சூழல். மெல்லஅடியெடுத்துவைத்து நடந்தார் செல்வா. மனம் கேட்கவில்லை திரும்பிப் பார்த்தார். அவர் கண்கள் ஆற்றுப் பெருக்கின் ஊற்ருகி அழுதன. கீழே...

தமிழர்களின் கண்ணீர்க் கோலம். உத்தமஞர் ஊர்வலத்தில் உயிரோடு வருகின்ருர். செத்தவராய் நாமெல்லாம் தெருவோரம் நிற்கின்ருேம் எத்தனை சோகம்? எத்தனை ஏக்கம்? செத்தவர்களாய் நின்ற தமிழ்க் கண்மணிகளைப் பார்த்தார் தந்தை.

துயரமே வடிவாகப் பயணத்தைத் தொடர்ந்தார். விண்ணுலகில் நின்ற பெருந்தகைகள் எட்டிப் பார்த்தார்கள். காந்தி, நேரு, அண்ணு, வன்னியசிங்கம்... எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி. செல்வா தம்மோடு இருக்க வருவதென்ருல் எவருக்குத்தான் மகிழ்ச்சிக் குதூகலம் இருக்காது. அந்த உள்ளக் குறு குறுப்பிலும் ஒருதவிப்பு.

காந்தி நினைத்தார் இந்திய மக்களுக்குச் சுதந்திரம பெற்றுக் கொடுத்து விட்டுத் தானே நான் வந்தேன். ஆனுல் செல்வாவோ? உத்தமர் காந்தியின் மனம் குழம்பியது "செல்வா இருக்கின்ருர் என்ற நம்பிக்கையில் அல்லவா நாங்கள் இங்கு வந்தோம்..." தவித்துப் போய் செயலற்று நின்றனர். வன்னியஞர், நாகநாதன், இராசமாணிக்கம்,திருச்செல்வம்,...

செல்வா ஏன் நெடும் பயணம் புறப்பட்டார். அவரையே நம்பிக்கை நட்சத்திரமாகக் கொண்டுவாழ்ந்த தமிழர்கள் "மாணிக்கக் கல் பதித்த முடிசூடக்காத்திருந்தோம். மன்னவனே காணிக்கை செலுத்தக் கனவிலும் நாம் எண்ணவில்லை என்று கதறிக் கண்ணீர் வடிக்க செல்வா ஏன் புறப்பட்டார். புரியாமல் குழம்பி நின்றனர் விண்ணுலகை அலங்கரித்த பெருந்தகைகள்.

விண்ணுலகில் காலடி எடுத்து வைத்தார் தந்தை செல்வா காந்தி இரு கரங்களையும் நீட்டி அணைத்துக் கொண்டார். விண்ணவர் மலர்தூவ செல்வா நடந்தார். "அடிமைத் தளையிலிருந்து உம் தமிழர் விடுபடமுன் ஏன் வந்தீர் பெரியவரே" கவலையுடன் கேட்டார் மகாத்மா காந்தி. அமைதி பொங்கி வழிந்துகொண்டிருந்த செல்வாவின் முகத்திலும் ஒரு படபடப்பு. மானம் இழந்து மாற்ருர்க்கு அடிமைத தொழில் செய்து எம் தமிழர் வாழ்வு இன்னல் படுகிறது. நீங்கள் இங்கு சுகமனுபவித்துக்கொண்டா இருக்கிறீர்கள் எப்படி மனம் வந்தது. மகாத்மா நீங்கள் எம் தமிழ் ஈழத்துக்குத் தேவையானவர். புறப்படுங்கள்" தந்தையின் கட்டளையை யார்தான் மீற முடியும். யாருக்குத்தான் மீற மனம் வரும்.

எதிர்ப்பட்டனர் ராஜாஜி காமராஜர், நேரு... மறுப்பச் சில்லை. அண்ணல் காந்தியின் பின்னுல் அணி திரண்டுவிட்டார்கள். அறிஞர் அண்ணு எதிர்ப்பட்டார். "மூதறிஞரே... இளைஞர் வழிதான் ஈழத்தில் சரிப்படுமென்று விட்டுவந்தீர்களா?" என்று கேட்டார். கூடவே நின்ற ஈவேரா முகத்திலும் அதே கேள்விக்குறியின் பிரதிபலிப்பு. அடிமைத் தளையில் நம்மினம் சூழ்ந்து கிடக்க இங்கென்ன செய்கிறீர்கள்"

**காவலூரான்**

கண்டிப்புடன் கூறிஞர் தந்தை.

படைபெருத்தது, விண்ணதிர நடந்தது.

எதிர்ப்பட்டது ஒரு கூட்டம். அனைவரின் முகத்திலும் ஏக்கம். கந்தையா ஏகாம்பரம், நாகநாதன்...நமதீழத் தலைவர்களின் அமரர் கூட்டம். செல்வாவுக்கு கோபிக்க உரிமை இருந்தது. ஆனுல் கோபத்தை வெளிப்படுத்தத்தான் அந்த சாந்தமூர்த்தியால் முடியாதே! அனைவரையும் அணைத்தார். "நீங்களெல்லாம் இருக்கவேண்டிய இடம் இதுவல்ல...புறப்படுங்கள்" ஆணை கிடைத்த பின்னும் ஆறியிருப்பார்களா? தந்தையின் சுட்டு விரல் அசைவில் அசைந்தவர்களல்லவா?

இமயம்போல் எதிர்நின்ற படையை நிமிர்ந்து பார்த்தார் செல்வா. "ஆணையிடுங்கள் தந்தையே..." சங்கிலியன் பண்டாரவன்னியன் கட்டபொம்மன்... செல்வாவின் முகத்திலே வெற்றிக் குதூகலம். இனியென்ன தமிழர்வாழ்வு விடிந்துவிடும் என்ற நப்பிக்கை. அது ஒன்று தானே தந்தைக்கு மகிழ்ச்சி.

புயலாக வீறுகொண்டு விண்ணிலிருந்து மண்ணிற்குப் புறப்பட்டது தமிழர் படை. "அடிமையாகி வாழவா வீட்டில் பதுங்கி நிற்கிருய்... தமிழா... ஒன்று சேர்..." விடுதலை முழக்கங்கள் ஓங்கி ஒலித்தன.

சிதறிக்கிடந்த தந்தையின் கனவு மொட்டுக்கள் நனவாக மலர்ந்துகொண்டிருந்தன. (கற்பனையூற்று)

## மடல் வழித் தொடர்பு

தமிழ்ழீழச் செய்திகளைத் தமிழ் நாட்டவருக்குத் தொடர்ந்து தெரிவிக்கவும் எமது நியாயமான உரிமைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி விளங்கவைத்து ஆதரவு திரட்டவும் தமிழ் நாட்டவருடன் மடல் வழித் தொடர்பு கொள்ள விரும்பும் தமிழன்பர்கள் தங்கள் பெயர், முகவரி, வயது, பால் போன்ற விபரங்களுடன் பின்வரும் முகவரிக்கு எழுதுங்கள்.

க. இராஜமனேகரன்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

## மாநாட்டு கலை நிகழ்ச்சிகள் தொடர்பாக...

மே 12, 13, 14ம் திகதிகளில் கோப்பாய்த் தொகுதியில் நடைபெறவுள்ள கூட்டணி மாநாட்டில்கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது. இதற்கு பொறுப்பாக ஆசிரியர் திரு. க. வை. தனீஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். கலை நிகழ்ச்சிகள் நடத்த விரும்புவோர் அவருடன் தொடர்புகொள்ளவேண்டப்படுகின்றனர். அவரது முகவரி'

க. வை. தனீஸ்வரன்,
ஆசிரியர்,
கோண்டாவில்.

# திறமையுடன் சித்தியடைந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை!

## திருமலை, வவுனியா மாவட்ட பரீட்சார்த்திகளின் அவதி!

நாம் சென்ற வருடம் சித்திரை மாதம் திருகோணமலையில் எமது உயர்தரப் பரீட்சையை எழுதினேம், எமது பெறுபேறுகளும் வந்தன, நாம் மிகவும் திறமைச் சித்திகளுடன் சித்தி பெற்றிருந்தோம், ஆனுல் எமக்கு இன்னும் பல்கலைக்கழக அனுமதிக்கான படிவங்கள் கிடைக்கவில்லை. நாம் பரீட்சைத் திணைக்களத்திலும், செனற்றிலும் இது பற்றி விசாரித்த போது திருமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில், மற்றைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது இம்முறை வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அதிகமான தொகையினர் பரீட்சை எழுதியிருப்பதால் அமைச்சரும் செனற் அகமும் இதுபற்றி கல்வித் திணைக்களத்துடன் விளக்கம் கோரியிருப்பதாக செனற் அதிகாரிகள் கூறினர்கள். இதனுல் இத்தகைய மாணவர்களின்புள்ளிவிபரப் பட்டியல் செனற் அகத்திற்கு இன்னும் வந்து சேரவில்லையாம். இதனுல் அது வந்தவுடன் இன்னும் ஓரிரு நாட்களில் அவர்களுக்குப் பட்டியல்கள் கிடைக்கக் கூடியதாயிருக்கும் என்று சொல்லப்பட்டது.

இப்போது வாரம் இரண்டு கடந்து விட்டது இதைப்பற்றிய பதிலொன்றையும் காணேம். மேலும் இவ்விரு மாவடடங்களிலும் உள்ள பாடசாலையில் தோற்றிய மாணவருக்கு மட்டும் படிவங்கள் அனுப்பப்பட்டதாகவும் கூறினர்கள். மேலும் இதனுல் இம்மாவட்டங்களைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கூட பாதிக்கப் படுகிருர்கள். இதனுல் தமிழ் மாணவர்க்ள் மட்டுமல்லாது சிங்கள மாணவர்கள் ஒரு சிலரும் பாதிக்கப் படுகிருர்கள். ஆனுல் அதிகமாகத் தமிழ் மாணவர்கள் தான் பாதிக்கப்படுகிருர்கள்.

மாணவர்கள் வெவ்வேறு மாவட்டங்களில் பரீட்சை எழுதுவது ஒன்றும் புதுமையானது அல்ல, இது யாவரும் அறிந்ததே. எல்லாம் முன்னைய அரசுகடைபிடித்த உயர்கல்வி பாகுபாட்டுக் கொள்கையால்தான். ஆனுல் இத்தர்மிஷ்ட அரசு அவற்றை நீக்கி விட்டதாக அறிவித்து இருக்கிறதே — பின்பு ஏன் தயக்கம்? அமைச்சர் இதைப்பற்றி விளக்கம்கோரியிருப்பது புதுமையான தொன்ருகும். அமைச்சர் கூட முன்பு பலதடவை இதைப்பற்றி வாயால் கூறியிருக்கிருர், எனவே இதில் அமைச்சர் மீது பழியைப் போடும் அசமந்த அதிகாரிகளின் செயலோ என்றும் ஐயுற வேண்டியிருக்கிறது. இதனுல் கிட்டத்தட்ட நூற்றுக்கும் அதிகமான தமிழ் மாணவர்கள் என்ன செய்வது என்று தெரியாது முழிக்கிருர்கள்;

இதைப்பற்றி எமது பாராளுமன்ற அங்கத்தவர்கள் பேரவையிலும் கேள்வி எழுப்ப வேண்டும். மேலும் இதுபற்றி அமைச்சரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுப்பார்களா என்று ஆவலுடன் எதிர்பார்க்கிருேம்.

—பரணீதரன் (சாவகச்சேரி)
—சிவானந்தன் (கொக்குவில்)
—செல்லக்காந்தன் (யாழ்ப்பாணம்)
— மோகன் (பருத்தித்துறை)

# விடுதலை இயக்கத்தின் பழம் தொண்டர் 'தமிழரசு' சின்னத்துரை எழுதுகிருர்!

சுதந்திரன்
ஆசிரியரவர்கட்கு,
அன்புடையீர்,

சுதந்திரன் 19.4.78 இதழில் சித்திரை பதினெட்டில் சிந்திய ரத்தம்! வாசித்தேன். பழைய நிகழ்ச்சிகளை-தியாக தினங்களை மீண்டும் ஞாபகமூட்டிப்பார்ப்பதால் அக் காட்சிகளை அன்று நேரில் காணுத காணக்கிடைக்காதவர்களுக்கு தமிழன் போராட்ட வரலாறு தொடர்வதற்கு வழி பிறக்கும். ஆகவே நீங்கள் எழுதிய கட்டுரை சரித்திரமாகக்கூட இன்ெருரு காலத்தில் வரக்கூடும் ஆகவே அதில்முரண்பாடாக வரக்கூடாது என்பதற்காக ஞாபகமூட்டுகிறேன்.

ஜீப்புக்கு முன்னே குறுக்காக விழுந்து ரயருக்கு தலையைக் கொடுத்து ஜீப் தலை தலைமேலே ஏற முயற்சித்த போதும்அசையாமல்உறுதியுடன்படுத்தவர்,வீரன் பழனி. அடுத்து தமிழரசு சார்பில் சிலாபம் தொகுதியில் போட்யிட்ட நண்பன் பிரான்சிஸ் பெரேராவைத்தான் காலிலும் தலையிலும் பிடித்து அங்கும் இங்குமாக எறிந்து விளையாடினுர்கள். பந்தாடப்பட்டும் படமும் இன்றும் என்னிடம் [illegible] படங்களும் பிறேம் போட்டு வைந்திருக்கிறேன்.

அன்றைய நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் பங்கு பற்றியதுடன் அன்று தபால் விநியோகம் பல இடங்களுக்கும் விஸ்தரிப்பதற்காக ஆலோசிக்கப்பட்டு—சத்தியாக்கிரகம் கலைக்கப்படுவதற்கு முதல்நாள்—மறு நாள் எனதுஆவரங்கால் தமிழரசி இல்லத்தில் தபால் கந்தோர் அன்றைய சட்டமறுப்பு தபால் மாஅதிபர் திரு. சு. நடராசா அவர்களும் திரு. சிவசிதம்பரம் அவர்களும் திறந்து வைப்பதாக இருந்தது. இரவு சத்தியாக்கிரகம் கலைக்கப்பட்டபடியால்குறிக்கப்பட்ட நிகழ்ச்சி நடை பெறவில்லை. ஆனுல் இன்னும் தபால் கந்தோர் திறக்கப்படும் என்ற விளம்பரத் துண்டுப் பிரசுரத்தில் ஒன்று நினைவுக்காக வைத்திருக்கிறேன்.

—க.சின்னத்துரை
ஆவரங்கால்
புத்தூர்

லாலா
நீலசோப்
எல்லா கடைகளிலும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயினும் நல்ல தலைவர்

**1961ம்** ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் 1962ம் ஆண்டு மே தின விழாவில் எழுப்பிய சுலோகம் "மொழி வழி பிரிந்தால் வாழ்வோம், இனறேல் வீழ்வோம்" என்பதாகும். அஃது அரசாங்க ஊழியர்கள் மொழிவழித் தொழிற் சங்கங்களை உருவாக்குவதற்கு ஒலிக்கப்பட்டது. அக்கருத்தே இப்போது மொழிவழி தமிழீழத்தை அமைத்தால் தான் வாழலாம் என்ற நிலையை உருவாக்கிற்று.

555ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையும், 4-12-1961 இல் வெளியிடப்பட்ட 560ம் இலக்கத்திறைசேரிச் சுற்றறிக்கையுமே மேற்குறிப்பிட்ட சுலோகத்தை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் எழுப்புவதற்குக் காரணமாக இருந்தனவெனலாம். 555ம் இலக்கச் சுற்றறிக்கை "சிங்களத் தேர்ச்சியின்றேல் 55 வயதிற்கு மேல்சேவை நீடிப்பு இல்லையென்றும், 560ம் இலக்கத்திறைசேரிச் சுற்றறிக்கைசிங்களத் தேர்ச்சியின்றேல சம்பள உயர்வு வழங்கப்பட மாட்டாதென்றும் கூறுகின்றன. இவற்றை அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் எதிர்த்ததைான்று, தந்தை செல்வா "தமிழ் அரசாங்க ஊழியர்கள் எவரும் சிங்களப பரீட்சைக்குத் தோற்றுது ஒரே முகமாக எதிர்த்து நின்றல், ஒரு வேளை அரசாங்கம் அதுபற்றி மறுபரிசீலனை செய்யலாம்" என்றுர். அதன்படி அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் தீர்மானித்தது. எம்மிடையே ஒற்றுமையின்மையால் இத்தீர்மானம் தோல்வியடைந்ததெனலாம்.

பல தமிழ் அரசாங்க ஊழியர்கள் சம்பள உயர்வின்றியும், சேவை நீடிப்பில்லாமலும் இருந்தார்கள். இதன் ஆரம்பக் கட்டமாகத்தான் எமது சங்கத்தின் மூன்றுவது வழக்கான கோடீசுவரன் வழக்கு தந்தை செல்வா, திருச்செல்வம் ஆகியோரின் ஆலோசனையின் பேரில், 10-10-1962இல் அரசாங்கத்திற்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்டது. அச்சமயம் பழைய ஊழியர்கள் புதிய ஊழியர்கள் என்ற வேறுபாடு காணப்படவில்லை.

கோடீசுவரன் வழக்குபழைய ஊழியர்களுக்குச் சாதகமான தீர்ப்பைப்பெற்றதன் பின்னர், அரசாங்க அமைச்சரவை உபகுழு சிங்களம் கற்காத புதிய ஊழயர்களை 1965ம ஆண்டு ஜனவரி முதலாந் திகதியிலிருந்து, வேலையினின்றும் நீக்குவது எனத்தீர்மானித்தது. பழையஊழியர்களைக் கட்டாய ஒய்வில் அனுப்பும்திகதியை 1965ம் ஆண்டு நடுப்பகுதிவரை பின்போட்டது.

இப்படியாகத் தமிழ் அரசாங்க ஊழியர்களின் துக்ககரமான நிலை அளப்பரியது. ஆயினும் எனது அனுபவங்களை ஆங்கு எடுத்துக்கூறுகின்றேன். துக்ககரமான நிலை உச்சக்கட்டத்தை அடைந்திருந்தவேளையில், புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. தந்தை செல்வா புதிய பிரதமா டட்லிசேனநாயக்காவுடன். கோடீசுவரன் வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் தொடர்புகொண்டு, அரசாங்க ஊழியர்களின் இன்னல்களை ஒரளவு நீக்கினர். பழைய ஊழியர்கள் எத்தரத்தைதச் சேர்ந்தவர்களாயினும், சிங்களத்தில் பயிற்சிபெற 'வேண்டுமென்ற நியதியை நீக்கி எல்லோருக்கும் சம்பள உயர்வு மீண்டும் கிடைக்கச்செய்தார். சேவையிற் சேர்ந்த மொழி மூலம் பதவியுயர்வுப் பரீட்சைகள் எழுதுவதற்கும், தட்டச்சுப் பரீட்சையில் சித்தியெய்துவதற்கும் ஒழுங்குகள் செய்தார். இதன் பயனுக 29-1-66 இல் நடைபெறும் எழுதுவினைஞர் சேவைத்தரம் இரண்டிற்கான பரீட்சை முதன்முறையாகத் தமிழிலும் நடைபெறுமென அரசாங்கம் அறிவித்தது.

புதிய ஊழியர்களைப் பொறுத்தவரையில் சில சட்டப்பிரச்சினைகள் முட்டுக்கட்டையாகவுள்ளனவென்றும், வடக்குக்கிழக்கு மாகாணங்களில் தமிழுக்குச் சில சலுகைகள் கிடைக்கவுள்ளதால், தற்காலிகமாகப்புதிய ஊழியர்கள் சிங்களம் படிப்பதை ஏற்றுள்ளோம் என்றும், தனது ஆலோசனையின் பேரில் சிங்களம் படிக்காதுவிட்ட புதியஊழியர்களுக்கு 1-7-1965விருந்து மேலும் மூன்றுண்டுகாலம் அவகாசம் பெற்றுள்ளதாகவும், மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டதும் புதிய ஊழியர்களின் மொழிப்பிரச்சினைகள் நீக்கப்பட்டு விடும் என்றும், ஆகவே புதிய ஊழியர்களை அமைதியாக இருக்கும் படியும் தந்தை செல்வா கேட்டுக் கொண்டார். இந்நிலையில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துள் புதிய ஊழியர்கள் பழைய ஊழியர்கள் என்ற கருத்துவேற்றுமை உருவாகியது. (ஆதாரம் 10-6-66 ஈழநாடு பத்திரிகையிற் காண்க.)

அ. எ. வி. சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் திருகோணமலை சென்ற் யோசேப் கல்லூரியில் 10-7-65 இல் நடைபெற்ற போது, முதன் முதலாகத் திரு. செ. கோடீசுவரன் தலைமையை எதிர்த்து உரையாற்றினேன். அங்கு நான் கூறியவற்றை ஒரு அன்பர் வீரகேசரியில் மக்கள் மன்றம் என்பதின் கீழ் வெளியிட்டிருந்தார். இதனை

**செ. மதுசூதனன்**

அடுத்துப் புதிய ஊழியர்கள் பலர் என்னுேடு ஆலோசனைகள் செய்தார்கள். நான். தமிழ் மொழி மூலம் சேவையிற் சேர்ந்தவர்களுக்குத் தமிழில் வேலை செய்யும் வாய்ப்பைஏற்படுத்தும் இயக்கத்திலீடுபட்டேன். எனது திணைக்களத் தலைவரோடுபோராடினேன். அவர் சாதகமாகப் பதிலளித்தார். இதனை "அரசாங்க ஊழியர் தனித் தமிழிலும் வேலை செய்ய வாய்ப்பு" என 27-9-66 வீரகேசரி முதற்பக்கத்தில் வெளியிட்டிருந்தது.

அ. எ. வி. சங்கத்தின் பொது வேலைத்திணைக்களக் கிளையில் துணைத்தலைவராகவும், தாய்ச் சங்கச் சட்ட நடவடிக்கைக் குழு, தமிழ் மொழிச்சட்ட நிறைவேற்றுக் குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும் இருந்த யான், பரந்த அடிப்படையிலான உண்ணுவிரதம் ஒன்றை மேற்கொள்ள ஆலோசிப்பதாகத் தந்தை செல்வாவுக்கு எழுதியிருந்தேன். அச்செய்தியை 20-2-67 வீரகேசரி இரண்டாம் பக்கத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் உண்ணுவிரதம் இருக்க உத்தேசம் என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தது.

நான் பல புதிய தமிழ் ஊழியர்களுடன் தந்தை செல்வாவைச்சந்தித்து "நீங்கள் தமிழ் மொழி மூலம் சேர்ந்த ஊழியர்களின் குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்காதபடியால், தமிழ் மொழியுரிமைக்காக வில்லாமல், ஆங்கிலத்தையும் முதலாளித்துவத்தையும் பாதுகாக்கவே அரசாங்கத்தை ஆதரிக்கின்றீர்களென்று எண்ணி, உங்களை எதிர்த்து உண்ணுவிரதம் இருக்கப் போகின்றேும்" என்று கூறினேன். அதற்குச் செல்வா ஆத்திரம் கொள்ளவில்லை. அன்புகலந்த முகத்துடன், உங்கள், குறைபாடுகள் எனக்கு விளங்குகின்றது. மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டதும் உங்கள் குறைகள் தீர்ந்துவிடும். உண்ணுவிரதத்தைக் கைவிடுங்கள்; உண்ணுவிரத மிருப்பீர்களாலுல், நானும் உங்களுடன் சேர்ந்து நீங்கள் உண்ணுவிரதத்தைக் கைவிடும் வரை உண்ணுவிரதமிருப்பதைத் தவிர வேறு வழியில்லையென்றுர்.

வீரகேசரியின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் "இடது சாரிகளின் தூண்டுதலினுல் புதிய ஊழியர்கள் கொந்தளிப்பு" என்ற தலைப்பில் வெளி வந்திருந்த செய்தியை (திகதி ஞாபகமில்லை)த் தலைவர் செல்வாவுக்குத் தெரிவித்தேன். அவர் ஆத்திரமடைந்தவராய், "வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற இச் செயலை நல்லூர்ப் பிரதிநிதி நாகநாதன் செய்திருக்கக் கூடாது" என்று நாகநாதனைக் கடிந்து கொண்டார். தாய் போன்ற அன்புள்ளம் கொண்ட அவருக்கெதிராக எதுவும் செய்ய எமது மனம் இடங்கொடுக்கவில்லை. நாங்கள் தோல்வியுற்றேும்.

நான் புதிய ஊழியர்கள் சார்பில் ஐந்துகோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைப் பிரதம மந்திரிக்கு அனுப்பி வைத்ததுடன், அதன் பிரதியைத் தந்தை செல்வாவிடம் கையலித்தேன். அதனை "நீதி வழங்குங்கள்—பிரதமரிடம் புதிய ஊழியர்கள் மகஜர்" என்று மகுடமிட்டு 24-4-67 சுதந்திரன் ஒன்பதாம் பக்கத்தில் வெளியிட்டிருந்தது. பயன் குறைவாகவேயிருந்தது; மன விரக்தியினுல் நானும் சங்கத்திலீடுபாடுகளைக் குறைத்துக் கொள்ளத் தொடங்கினேன். தந்தைசெல்வாவின்தொடர்பும் குறைந்தது.

சற்றில், 1973 இல், அவர் பாராளுமன்றப் பதவியைத் துறந்திருந்த சமயத்தில், காலிமுகத்திடலில், அவரை அடிக்கடி சந்திக்கும்வாய்ப்பு ஏற்பட்டது. ஒரே ஆசனத்தில் அவரோடு அமர்ந்து அளவளாவியிருக்கின்றேன் அப்பொழுதான் அவரின் அன்புள்ளத்தை நான் நன்கு உணர்ந்தேன் "தம்பி சங்கம் எப்படி? மாவட்ட சபைகள் விடயத்தில்நான் ஏமாற்றப்பட்டேன். புதியதமிழ் அரசாங்க ஊழியர்களுக்காக வருந்துகிறேன்" என்று பழைய நினைவுகளை முன்வைத்துப் பேசினுர். சிங்கள அரசியலார் எவ்வாருக ஏமாற்றியபோதிலும், அவர் சிங்கள மக்கள் மீதும் அன்பு பாராட்டியே பேசினுர். "நான் முதலில் தமிழன் என்று சிந்திக்கின்றேன், அடுத்து நான் மனிதன் என்று சிந்திக்கின்றேன். ஆகவேதான், மனிதர்களைத் துன்புறுத்தும் ஆயுதப் போராட்டங்களைப்பற்றிச் சிந்திக்காமல், அறவழியாகிய அகிம்சை வழிப் போராட்டங்களைப் பின்பற்றுகின்றேன், என்றும் அவர் என்னுேடு உரையாடும்போது கூறினுர்; இவைகளையெல்லாம் என் மனக் கண் முன் நிறுத்திப் பார்க்கும் போது, அவர் அமரராகி விட்ட செய்தி எனக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுக்கின்றது.

## பனை தமிழ்மகளிர் பேரவை நிர்வாகிகள்

பனை மகளிர் பேரவை அங்குரார்பணக் கூட்டம் திருமதி மங்கையர்கரசி—அமிர்தலிங்கம் தலைமையில் பனை மகாவித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. உத்தியோகத்தர் தெரிவின் போது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவி: திருமதி. கிருஸ்ணலீலா நாகேந்திரம், உபதலைவி: செல்வி. கந்தையா அரியமலர், செயலாளர்: திருமதி. புஸ்ப்பா சேதுகாவலர், உப செயலாளர்: செல்வி: செல்லத்துரை கருணாதவி, பொருளாளர்: திருமதி சரஸ்வதி கார்த்திகேசு,

நிர்வாக சபை உறுப்பினர்கள்: செல்வி கி. அன்னமுத்து, திருமதி. அல்பிறேற், செலவி. ந. மகேஸ்வரி, செல்வி ஆ. பூலோகம், செல்வி க. தேவாம்பாள், செல்வி கா. கிருஸ்ணலீலா, செல்வி சி. மனோன் மணி, செல்வி சி. மாக்கிறேற், செல்வி வீ. கனகமணி,

# நவம் வர கூட்டமும் வந்தது!
# நவம் போக கூட்டமும் போனது!

முன்னுள் சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. குமாரசுவாமியின் நினைவு அஞ்சலிக்கூட்டம் 9 4-78-ல் சாவகச்சேரிச் சந்தை மைதானத்தில் நடைபெற்றது. நோட்டீஸில் சுமார் இருபது பேச்சாளர்கள்; கூட்டம் தொடங்கும் போது ஐம்பது பேர்கள்கூட இல்லை.

இரவு 8 மணியளவில் திரு. வி. என். நவரத்தினம் வந்த போதுதான் மைதானத்தில் சனப் பொலிவு காணப்பட்டது. இருபது பேச்சாளர்களோடு இடைக்கிடை புகுத்தப்பட்ட பேச்சாளர்கள், பாட்டுக்கள், பிரசங்கங்கள் என்று கூட்டம் "தமாஷ்" பாணியில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கூட்டத்தலைவரோ அடிக்கடி தனது ஆசனத்தை விட்டெழுந்துமேடையைச்சுற்றி நின்ற பெருங்கூட்டத்தினருக்குள் துளாவித்துளாவிப் பார்த்து ஆட்களுடன் குசுகுசுத்து வந்தார்.

திரு. வி. என். நவரத்தினம் அவர்கள்வந்து சொற்பொழிவாற்றிவிட்டுப் போனதும் கூட்டத்தில் முக்கால்வாசிச் சனக் கூட்டமும் போய்விட்டது.

8-4-78-ல் 'தினபதி'யில் திரு. கே. எஸ். மகேசன் (சட்டத்தரணி) எழுதிய ஒரு கட்டுரையில் குமாரசுவாமிஞாபகார்த்தச் சபைக்குத் திரு. வி. என். நவரத்தினம் தலைமைதாங்குதல் உசிதமானது என்று ஆலோசனை கூறியிருந்தார்.

இது, கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த "ஜி ஜி. காங்கிரஸ்" கோஷ்டியின் ஆதிக்கத்திலுள்ள அறங்காவல் குழுவினர் சிலரின் மனதை நோவச்செய்திருத்தல்வேண்டும். அதனுல்தானே என்னவோ, கூட்டத்தலைவர், திரு. கே. எஸ். மகேசனைப் பேசஅழைத்தபோது, "இவர் யாரையும் மனம் நோகப் பேசமாட்டார் என்றும் நகைச்சுவையாகப் பேசுவார் என்றும் நம்புகிறேும்" என்றுர்.

அஞ்சலிக் கூட்டத்தில் நகைச்சுவையாவது நையாண்டியாவது என்றுகோபித்த சட்டத்தரணி கே. எஸ். மகேசன், கூட்டத்தலைவரின் மனம் நோகப் பேசுவதாகப் பின்வருமாறு சொன்னுர்:-

"ஒவ்வொரு பேச்சாளர் பேசுவதற்கு முன்னும்பின்னுமாகக்கூட்டத்தலைவர்நீண்ட நேரம் பேசிப்பேசி எல்லோருடைய நேரத்தையும் பறித்துவிட்டார். ஆதலால் இப்போது எல்லோரும் வீடு திரும்பும் நேரம் வந்துவிட்டது என்பதைத்தவிர எனக்குப் பேசுவதற்கு வேறு எதுவும் இல்லை."

திரு. மகேசன் ஆசனத்தில் அமர்ந்ததும் கூட்டத்தினர் ஏமாற்றம் அடைந்தனர். ஜி ஜி. காங்கிரஸ்காரர்களின் ஆதிக்கத்திலுள்ள அறங்காவல் குழுவினருக்கு அசடு வழிந்தது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் மேதின விழாவுக்கு விரிவான ஏற்பாடுகள்!

தமிழர் மேதின விழா 18க்கு மேற்பட்ட மொழி வழித் தொழிற்சங்கங்கள். தமிழர் ஆசிரியர் சங்கம்; தமிழர் விடுதலைக்கூட்டணி, கூட்டணியை சார்ந்தஇயக்கங்கள் ஆகியன ஒன்றுகச் சேர்ந்து பிரமாண்டமான முறையில் சிறப்பாகக் கொண்டாடுமுகமாக, ஊர்வல நிகழ்ச்சிகளும் கூட்ட நிகழ்ச்சிகளும். கலை நிகழ்ச்சிகளும் தயாராகவுள்ளது.

மேதின ஊர்வலம், முத்திரைச் சந்தையிலிருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி, ஸ்ரான்லி வீதி. மணிக்கூட்டு வீதி, மின்சாரநிலைய வீதி, ஆஸ்பத்திரி வீதி, வேம்படி வீதி வழியாக மத்திய கல்லூரி விளையாட்டு அரங்கில் நடைபெறும் கூட்டமைதானத்தில் வந்தடையும்.

இவ்வூர்வலத்தில் இளைஞர் அணி, விவசாயிகள் அணி மாணவர் அணி, மகளிர் அணி உழவுயந்திரம், கார், லொறி, துவிச்சக்கர வண்டிகள் ஆகியன சேர்ந்த ஊர்திகள் அணி என்பன இடம் பெறும்.

பொறுப்பாக பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்।

**தொழிலாளர் அணிக்கு பொறுப்பாக;**

திரு. சந்திரா ஸ்ரீபதி (அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்), திரு. பொ. காராளசிங்கம், திரு. வே. சுப்பிரமணியம் (இ.போ.ச. கோண்டாவில்) திரு. எம். சந்தியாப்பிள்ளை. திரு. என். தேவராசா (தேசிய அரசாங்க சுகாதார சேவை ஊழியர் சங்கம்) திரு. தம்பு கந்தையா, திரு. எஸ். மாணிக்கம்;

**இளைஞர் அணி பொறுப்பாளர்கள்**

திரு. வண்ணை ஆனந்தன், திரு. மாவை சேனாதிராசா, திரு. சிவ மகாராசா.

**மகளிர் அணி**

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்.

**கலாச்சார நிகழ்ச்சி**

திரு. கே. நடராசா.

**மோட்டார் பவனி**

திரு. சி. நடராசா, திரு. என். ரி. செல்லத்துரை.

**ஊர்திகள்**

திரு.ஒ. டி. இம்மானுவேல், திரு. என். பாஸ்கரன்

**ஊர்வல ஒழுங்குகள்**

திரு. ஆ. வேலுப்பிள்ளை

**தொண்டர்கள் பொறுப்பாளர்கள்**

திரு. க. முருகரத்தினம், எஸ். முத்துசாமி, எஸ். சண்முகராசா.

என்றும் நடைபெருத முறையில் சிறப்பாக அணி வகுத்து — ஊர்வலம் நடைபெறும்,

ஊர்வலத்தைத் தொடர்ந்து மேதின விழா யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். மேதின விழாவில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கூட்டணி தேசியப் பேரவை உறுப்பினர்களும், கூட்டணி சார்ந்த இயக்கத்தினரும் பேசுவர். மேதின ஊர்வலம் கூட்ட மைதானத்தை வந்தடைவதற்கு முன் சின்னமணி வில்லுப்பாட்டுக் குழுவினரால் "தமிழர் மேதினம்" என்ற தலைப்பில் வில்லுப்பாட்டு நடாத்தப்படும்.

கடைசியாக மேதின விழாவின் கடைசி நிகழ்ச்சியாக கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். கலைநிகழ்ச்சியில் வைரமுத்து குழுவினரின் "நந்தனர்" நாடகமும் நாட்டுக்கூத்தும், சிறப்பாக வேறு பலநிகழ்ச்சிகளும் இடம்பெற இருக்கிறது.

இவ் ஏற்பாடுகளை திரு. மு. ஆலாலசுந்தரம் தலைமையிலான அமைப்புக்குழுவின் செயலாளர் ஐ. தி. சம்பந்தன், இணைச்செயலாளர் செல்லையா— மெற்ருஸ்மயில் என்பவர்கள் விரிவான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்;

## தமிழீழ முதல்வரின் அன்பழைப்பும் தமிழக (முன்னுள்) முதல்வரின் பதிலும்!

டாக்டர் கலைஞர்
மு. கருணாநிதி,
தலைவர்—திராவிட
முன்னேற்றக்கழகம்.
சென்னை தமிழ் நாடு.

வணக்கம்,

இலங்கைத் தமிழ் மக்களின் நல்வாழ்த்துக்களைத் தங்கட்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 ஏப்ரல் 26ம் நாள் புதன் கிழமை, தமிழ் ஈழத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்த முதலாண்டு நினைவுநாள்.— அன்றைய தினம் தந்தை செல்வாவை நினைவு கூர்வதில் ஈழத்தமிழ் மக்களுடன் தாங்களும் இங்கு வந்து கலந்து கொள்ள வேண்டும் என்பது எம் அனைவரின் பெரு விருப்பாகும்;

இந்நாளை யொட்டி ஒரு வாரகாலத்துக்கு எம்முடன் வந்து தங்கி, எமது நாட்டின் பல்வேறு பகுதிகட்கும் சென்று மக்களுடன் உறவாடிச் செல்லுமாறு அன்புடன் அழைக்கிறேன்.

தமிழுக்கும், தமிழ் மக்களுக்காகவும் தாங்கள் ஆற்றும் அரிய பணிகள் தொடர வாழ்த்துக்கள்.

அன்புடன்
அ. அமிர்தலிங்கம்;

●

திரு. அ. அமிர்தலிங்கம்
அவர்கட்கு.

அன்புடையீர்!

தந்தை செல்வா நினைவு நாளில் கலந்துகொண்டு, இலங்கையிற் தங்களையும், ஏனைய தமிழ் அன்பர்களையும் காண அளவற்ற ஆர்வம் எனக்கு உண்டு. ஏப்ரல் இறுதிவாரத்தில் என்மீது கொலை முயற்சித்தூண்டுதல் வழக்கு, இங்கு நீதிமன்றத்தில் தொடங்குகின்றது. என்ன செய்வது வரஇயலாமைக்கு வேதனை அடைகிறேன். நிச்சயம் சூன் திங்களுக்குப் பின் இலங்கைவந்து தங்கள் ஆவலையும் நிறைவு செய்து, நானும் மகிழ்ந்து திரும்புவேன்.

அன்புமறவாத
மு, கருணாநிதி.

## இ.போ.ச. தமிழையும் தமிழ்ப்பகுதிகளையும் புறக்கணிக்கின்றது

தமிழைப் புறக்கணிப்பதிலும் தமிழ்ப்பகுதிகளைப் புறக்கணிப்பதிலும் இ. போ. சபை முன்னணியில் உளது, தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அமைச்சரின் பொறுப்பிலிருந்தும் இ.போ. ச. தமிழினத்தைப் புறக்கணிப்பதில் போட்டி போடுகின்றது!

* இ. போ. சபைக்கு இயக்குநர்கள் நியமிக்கப்பட்டபொழுது தமிழர் ஒருவரையும் புதிய அரசாங்கம் நியமிக்கவில்லை!

* இ. போ. ச. தலைமை அலுவலகத்தில் பெயர்ப்பலகைகள் முதலியனஎல்லாமே சிங்கள மயம்! தமிழை மருந்துக்குக்கூடக் காணல் முடியாது!

* தமிழ்ப்பகுதிகளில் வசுநடத்துனர்களுக்கு (conductors) அனுப்பப்பட்ட நேர்முகப்பரீட்சை அழைப்புக் கடிதங்கள் தனிச்சிங்களத்தில்!

* இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற காலம் தொடக்கம் இன்றுவரை 597 புதிய வசுக்களை எழுபது வசுச்சாலைகளுக்கு அனுப்பிய இ. போ. ச, யாழ்ப்பாணத்துக்கு ஒரு புதிய வசுவையும் அனுப்பவில்லை.

* மூன்று மாதங்களுக்கு முன் புதிய வசுக்களை யாழ்ப்பாணம் அனுப்புமாறு பிரதி அமைச்சர் கட்டளையிட்டிருந்தும் இ. போ. ச. யாழ்ப்பாணத்தைப் புறக்கணித்து வருகின்றது:

* போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு எம். எச், முகமது அவர்களே தேசிய அரசுப் பேரவையில் 20-4-78இல் யாழ்ப்பாணம் கவனிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன் எனக்கூறியுள்ளார்.

## ஏப்ரல் 26ல் தந்தை செல்வா நினைவு நாள் கூட்டங்கள்!

தந்தை செல்வா அவர்களின் நினைவு நாள் கூட்டங்கள் ஏப்ரல் 26ம் திகதி புதன் கிழமைமாலை நல்லூர் சந்தை மைதானத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில்மூதறிஞர் செல்வா பற்றி சுதந்திரன் ஆசிரியர் எழுதிய 'செல்வாஞ்சலி' எனும் நூலும் வெளியிடப்படும். அதே தினம் காங்கேசன்துறையிலும் செல்வா நினைவுக் கூட்டம் இடம்பெறுகிறது.

## காலை 7 மணிக்கு செல்வா சமாதியில் அஞ்சலி!

யாழ்ப்பாணத்திலுள்ள செல்வா சதுக்கத்தில் 26-4-78 காலை 7 மணிக்கு அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம் பெறும். இதில் திரு. ஆர். ஆர். திவாகரும் கலந்துக் கொள்வார்

## செல்வா நினைவு கவிதை, கட்டுரை போட்டி

மூதறிஞர் தந்தைசெல்வா அவர்களின் நினைவாக லண்டன்! ஈழவிடுதலை இயக்கத்தின் ஆதரவுடன் சுதந்திரன் நடாத்திய கவிதை, கட்டுரைப் போட்டி சம்பந்தமாக நடுவர்களின் தீர்ப்பு இன்றும் கிடைக்காததனுல் போட்டி முடிவுகளை இந்த இதழில் அறிவிக்க முடியவில்லையென்பதை அறியத்தருகிறேும். நடுவர்களின் தீர்ப்பு வந்ததும் போட்டி முடிவுகள் வெளியிடப்படும். பரிசுத் தொகைகள் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் கூட்டணித் தலைவரினல் வழங்கப்படும்.

## தந்தைக்கு கத்தோலிக்க அஞ்சலி

மேற்படி அஞ்சலி யாழ். கத்தோலிக்க போராலயத்தில் (சென் பற்றிக்ஸிற்கு அருகாமையில்) அருட்திரு. செல்வராஜா அடிகளினுல் 26-4-78 புதன் அதிகாலை 5.30மணிக்குவிசேடபிரார்த்தனை நடத்தப்படும்.

அதில் கத்தோலிக்கர் மட்டுமன்றிஏனையோரும் கலந்து கொண்டு தந்தையின் ஆத்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ள அழைக்கிருர்கள் யாழ். கத்தோலிக்க தந்தை செல்வா அஞ்சலிக் குழுவினர்.

## 'நீ என்ன செய்கிருய் என்று செல்வா என்னைக் கேட்கிருர்

### உருவப்படத்தை திறந்துவைத்து அமிர் உரை!

"இங்கு தந்தை செல்வாவினுடைய உருவப்படத்தை திறந்து வைத்த நேரத்தில், அந்தப்படத்திலிருந்து தந்தை செல்வா என்னையே உற்றுப் பார்ப்பதுபோல எனக்கு ஒரு பிரமை தோன்றியது. நீ என்ன செய்கிருய்?" என்று தந்தை அவர்கள் என்னைக்கேட்பது போல அது எனக்குத் தோன்றியது. செல்வாவிடம் 30 ஆண்டுகளாக பாடம் கேட்டவன் நான். அவருடைய உணர்வுகளையும் சிந்தனைகளையும் அறிந்தவன் நான்; அந்த முறையில் செல்வா காட்டிய வழியில் அவர் கண்ட கனவுகளை நிறைவேற்ற ஒய்வு ஒழிச்சலின்றிப் பாடுபடுவதே தந்தைக்கு நாம் செய்கின்ற கைமாருகும்".

இவ்வாறு அரியாலையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய [illegible] முதல்வர் திரு. அமிர்தலிங்கம் பா; உ; குறிப்பிட்டார்; தந்தை செல்வாவின் 80வது வயது பூர்த்தியையொட்டி அரியாலையிலுள்ள டாக்டர் செல்வி. தேவா அவர்களின் "தந்தை செல்வா ஞாபகார்த்த மருத்துவ மனையில்" ஏழைகளுக்கு இலவச வைத்தியம் செய்யப்பட்டது. இந்த இலவச வைத்தியசிகிச்சையை தந்தை செல்வாவின் பாரியார் திருமதி செல்வநாயகம் ஆரம்பித்து வைத்தார். இதையடுத்து நல்லூர் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசியபோதே திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

கருத்தரங்குக்கு முன்னர் திரு. எஸ். ஸி. சந்திரகாசன் குத்துவிளக்கேற்றி வைக்க, திரு. அமிர்தலிங்கம் செல்வாவின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைத்தார்; [illegible] மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் எஸ். ஸி. சந்திரகாசன், கோவை மகேசன், கணேசமூர்த்தி ஆகியோர் பேசினர். டாக்டர் தேவா நன்றி கூறினூர்.

**யோகக்கலை**

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 5பார்சோப் அல்லது 2 நீம் சோப் அல்லது 2 மெடிக்கேற்றட் சோப் அல்லது 2 சலவைப்பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி விளக்கப்படங்களுடன் கூடிய நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் இலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம். பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org